
# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

# இயேசுவைப் பார்த்த முரடன்

(ஞானம்) வாசகர்

இருண்ட காட்டில் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது நள்ளிரவு மணி 12 எனக்கு வழித் துணையாக 'கிறிஸ்துவின் வசனம்' என்ற பத்திரிக்கையை கையில் வைத்திருந்தேன். இடையிடையே மர இலைகளின் சலசலப்பு. ஆந்தையின் அலறல் எனக்கு பின்னால் சற்று தொலைவில் ஒரு கரிய உருவம் என்னை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது. நான் கிறிஸ்துவின் வசனத்தை இறுகப் பிடித்துக் கொண்டேன். அந்த உருவம் அருகில் நெருங்கியதும் அது ஒரு கொள்ளையன் என்று புலப்பட்டது கையில் ஒரு கத்தி. பரட்டைத் தலை, சுருண்ட மீசை, தடித்த உதடு, பருத்த கண்கள், என் அருகில் வந்த அவன் என் கையைப் பிடித்து ''என்ன வைத்திருக்கிறாய்?'' என்று உறுமினான், ''கிறிஸ்துவின் வசனம்'' என்றேன் நான். ஏளனமாய் சிரித்த அவன் ''கிறிஸ்துவை நீ பார்த்திருக்கிறாயா?'' என்றான். ''பார்த்திருக்கிறேன். பார்த்துக்கொண்டும் இருக்கிறேன்'' என்றேன். ''எங்கே எனக்கு அவரை காட்டு'' என்று அவன் கத்தியை உயர்த்திக் கட்டளை இட்டான். ஆனால் அடுத்த கணம் அவன் தன் நெஞ்சை பிடித்த வண்ணம் மயங்கிக் கீழே விழுந்தான். மேலே என்ன நடந்தது என்பதைக் கவிதையில் காணுங்கள்.

''இயேசுவை எவ்விடம் பார்க்கலாம்?'' என்றான்
இருண்ட ஓர் காட்டிலே பின் வந்த முரடன்
பேசிய முரடனின் கண்களும் இருண்டன
பின்னவன் மயங்கியே விழுந்தனன் கீழே.

விழுந்தவன் அவனை தோழிலே எடுத்தேன்
விரைந்துமே நானும் நகர்புறம் வந்தேன்
மருந்தக மனையில் கிடத்தினேன் அவனை
மயக்கமும் தெளிந்தே விழித்தனன் அவனும்

''இயேசுவின் இருப்பிடம் பார்த்துமே விட்டேன்''
என்றவன் கைகளை உயர்த்தியே சொன்னான்
''நேசமாய் நீ செய்த காரியம் அதனில்
இருக்கிறார் இயேசு'' என்றவன் பகர்ந்தான்.

# பொய் நாவு - Lying Tongue

பொய் பேசுவது இன்றைய நாட்களில் சர்வசாதாரணமாகிவிட்டது. இது மனிதனை அழிவுக்கு வழிநடத்துகிறது. பரிசுத்த வேதாகமத்தில் பொய் சொல்லி மரித்துப்போன கணவன் - மனைவியைக் குறித்து அப் 5; 1-10 ல் பார்க்கலாம் அனனியா, சப்பீராள் ஆகிய இவ்விருவரும் தங்களுடைய காணியாட்சிகளை விற்று ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக் கொண்டு மீதத்தை அப்போஸ்தலருடைய சமூகத்தில் கொண்டு வந்தார்கள் நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் என்று கேட்கும் போது ஆம் என்று பொய் சொல்லி இருவரும் மரித்துப் போகிறார்கள்.

இது நமக்கு நல்ல போதனையாக இருக்கிறது. அநேக சமயங்களில் பணமே பொய் சொல்ல நம்மை இழுத்துச் செல்கிறது. சாலோமோனின் நீதி மொழிகள் 21; 6 ல் பொய் நாவினால் பொருளை சம்பாதிப்பது சாவைத்தேடு-கிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும் என்கிறார். பிரியமானவர்களே! நாம் நேர்மையாக சம்பாதித்து தேவன்நமக்குக்கொடுத்தஇந்த பூலோகவாழ்க்கையில் அவருக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்.

கர்த்தர் கொடுத்த நாவினால் அவரை துதிக்க வேண்டும். அவரைக் குறித்து அநேகருக்குச் சொல்ல வேண்டும்.

கர்த்தர் ஆறு காரியங்களை வெறுக்கிறார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். நீதி 6; 16 - 17 அதில் ஒன்று பொய் நாவு நமதாண்டவர் வெறுக்கிற இந்தக்காரியத்தை செய்யலாமா? தாவீது என்ன சொல்லுகிறார் என்று வாசியுங்கள். சங் 119; 163 பொய்யை பகைத்து அருவருக்கிறேன், உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன் என்கிறார். நீங்கள் எதை பகைக்கப்போகிறீர்கள்! எதை நேசிக்கப்போகிறீர்கள்! இன்றேதீர்மானம் எடுங்கள். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், சிறிய பொய் சொல்லிக்கொள்ளலாமென்று. நண்பரே! கொஞ்சம் புளிப்புள்ள மாவு அனைத்தையும் உப்பப் பண்ணும் என்பதை அறியாதிருக்கிறீர்களா? அதே போல் கொஞ்சம்விஷம் அருந்தினாலும் மரணமே, அதிக விஷம் அருந்தினாலும் மரணமே. ஆகையால் தாவீதைப்போல் நாமும் பொய்யைப் பகைக்க வேண்டும். எபேசியருக்கு பவுல் எழுதும் போது எபேசி 4; 25ல் பொய்யைக்களைந்து, அவனவன்பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன் என்கிறார் ஒருவேளை நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்குமுன்பொய் பேசியிருக்கலாம் ஆனால் இப்பொழுது பொய்யைக் களைந்து மெய்யைப் பேச வேண்டும்.

சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்,பொய் நாவோ ஒரு நிமிஷம் மாத்திரம் இருக்கும் நீதி 12:19 நாம் என்றும் உண்மையே பேசுவோமென்றால் நிச்சயமாக நிலைத்திருப்போம்.

சத்தியபரராகிய இயேசுகிறிஸ்து நம்மோடு இருந்து நம்மை வழி-நடத்துவார். அநேகர் இந்த கடைசி நாட்களில் நாங்கள் உண்மையான சபையில் இருக்கின்றோம். கர்த்தர் ஏற்படுத்தின சபையில் தான் இருக்கின்றோம். என்றுசொல்லிக்கொள்கிறார்கள் உண்மை தான்! ஆனால் வேதம் சொல்லியபடி நடக்கவில்லைய! ஜீவியத்தில் கிரியையில்லையே! நாவு பொய் பேசுகிறதே! எரேமியா காலத்தில் யூத ஜனங்கள் எல்லோரும் இப்படியே சொன்னார்கள் எரேமியா 7 ;4 கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி பொய் வார்த்தைகளை நம்பிக் கொள்ளாதிருங்கள். ஆம் பிரியமானவர்களே! முதலாவது நம்மை சீர்படுத்துவோம், பொய் நாவை நம்மிலிருந்து அறுத்துப்போடுவோம்,

பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்று வெளி 21;8ல் வாசிக்கின்றோம். நாம்இந்த கடலுக்குப்போகாமலிருக்க நம்முடைய ஜீவியத்தில் பொய் பேசாமல் உண்மையே பேசுவோம். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுவோம்.

கர்த்தர் உங்களை இவ்விஷயத்தில் காத்து வழி நடத்துவாராக! ஆமென்.

## சபை செய்திகள் :

(1) வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபைக்கு ஒரு சொந்த இடத்தை கர்த்தர் கொடுத்தார். சபைக்கட்டிடம் கட்டப்பட ஜெபியுங்கள்.

(2) செப்டம்பர் 16, 17 தேதிகளில் மதுரை ஆலங்குளம் கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற சுவிஷேசக் கூட்டத்தில் சகோ. தானியேல்ராஜ், சகோ. சவுந்தரராஜன் ஆகியோர் சென்னையிலிருந்து வந்து தேவசெய்தி அளித்தனர். அன்று 6 ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

| பெயர் | ஊர் | ஊழியர் |
|---|---|---|
| 1. D. ராஜவிசுவாசம் | சொக்கிகுளம் | P.J. டேவிட் - ராஜாமணி |
| 2. Dr. ஜெயா | ,, | |
| 3. W. ஞானசுந்தரி | S. ஆலங்குளம் | |
| 4. ஹென்றி தேவதாசன் | ஆனையூர் | |
| 5. ஜான் செல்வராஜ் | பீ. பி. குளம் | |
| 6. J. ராகேல் | ,, | |

### அக்டோபர் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. தயாளன், கோவை
2. ராபர்ட் ,,
3. தா. தமிழ்வானன் மேல்விஷாரம்
4. மெர்ஸி கலைவாணி வத்தலக்குண்டு

### வெற்றி பெற்ற சிறுவர்கள்

1. சிந்தியா, வத்தலக்குண்டு
2. ராஜலட்சுமி ,,
3. முனியம்மாள் ,,
4. ஜாஸ்மின் ,,
5. சோபியா லிஸி கொட்டப்பட்டி
6. ஜோஸ்பின் ரமனி, G.K.பட்டி
7. ஜெயசீலி ,,
8. உத்தமன் ,K. பட்டி
9. செல்லமணி ,,
10. வேல்மணி ,,
11. மகாராஜன் ,,
12. மாசிலாமணி ,,
13. அனிதா, C K. புரம்
14. பிரேமலதா, T.கல்லிப்பட்டி

### அக்டோபர் மாத இதழின் விடைகள்

1. பரிபூரணமுள்ளவர்களாய் கொலோ 2 : 10
2. பங்கு எபி 3 : 14
3. ஒழிந்து 1 யோ 2 : 17
4. வெளிச்சமாய் மத் 6 : 22
5. ஆகாரம் சங் 111 : 5
6. தவறு
7. தவறு
8. 3, மாற்கு, ரோமர், 1, கொரிந்தியர்
9. சீத்தீம்
10. இயேசு கிறிஸ்து

## சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

1. நீங்கள் — 11 தெச 3 : 6
2. சாப்பிடவுங் — 11 தெச 3 : 10
3. பொய்யான — 11 தெச 2 : 9
4. கொடிய வஞ்சகத்தைத் — 11 தெச 2 : 12
5. கீழ்ப்படியாதவர்களுக்கும் — 11 தெச 1 : 7

## இம்மாத வேதஅறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து இம்மாதம் 25 ம் தேதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புக.

1. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை யாருடையது?
2. மார்த்தாளின் சகோதரி பெயர் என்ன?
3. தீமையை கர்ப்பம் தரித்து எதைப்பெறுகிறார்கள்?
4. செருயாவின் குமாரர்களுள் யார் கலைமான்களில்ஒன்றைப்போல ஓடுகிறவனாய் இருந்தான்?
5. எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம் என்று யார் சொல்வது?
6. ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்களா?
7. உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்று எவர்களைப் பார்த்து கூறினார்கள்?
8. கிறிஸ்துவின் சபை உலகத்திலிருக்கிற சபை, சங்கங்களைப் போன்றதா?
9. ஆசாரியனுடைய உதடுகள் எதைக் காக்க வேண்டும்?
10. மோசே எதற்கு யேகோவாநிசி என்று பெயரிட்டான்?

## சிறுவர் வேத அறிவுப் போட்டி

(1 தீமோத்தேயு புத்தகத்திலிருந்து)

1. பாவிகளை இரட்சிக்க ........... உலகத்தில் வந்தார்
2. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் ......... ஒருவரே
3. சீர் கேடும், கிழவிகள் பேச்சுமாயிருக்கிற ........... விலகி
4. பாவஞ்செய்தவர்களை ........... முன்பாகக் கடிந்துகொள்.
5. உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் ........... போதுமென்றிருக்கக் கடவோம்.

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No. 84661–92.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 8.30
புதன் மாலை 7.00

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு,
வத்தலக்குண்டு-624202

PRINTED MATTER

To.

If undelivered please return to;
From
**THE EDITOR**
WORD OF CHRIST
P. Box No. 5
**Batlagundu-624202**
S. India

Edited and published by B. Arjunan M.A., A.Bs., on behalf of church of christ. near water tank, Batlagundu
Printed by C. Pandiyarajan B.Sc, SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202. S India